30th March 1959]

Famine relief measures in Tirunelveli District

* *S.N. Q.* 23.—SRI M. S. SELVARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்ச நிவாரண வேலைகள் தொடங்கு வதற்கு ஜில்லா கலெக்டரிடமிருந்தும் சட்டசபை அங்கத்தினர்களிட மிருந்தும் முறையீடு வந்திருக்கிறதா ?

(ஆ) அப்படியானுல், என்னென்ன வேலைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government have issued orders permitting the Collector of Tirunelveli to undertake low scale famine relief works, such as gathering and spreading of metal gravelling in existing roads and formation of new roads in the drought affected areas to provide employment to the agricultural labourers.

SRI M. S. SELVARAJAN : தற்பொழுது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தாலூக்காக்கள், கிராமங்கள் விவரம் கொடுக்கப்படுமா ? இனிமேல் புதிய தாக எதேனும் வேலை செய்ய வேண்டுமானல் அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் தான் செய்ய வேண்டுமா ? அல்லது கலெக்டர் தனது யுக்தானு சாரப்படி செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக சுமார் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கே என்ற விவரங்கள்கூட இன்னொரு கேள் விக்கு பதிலிலே இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கேள்வி வரும்பொழுது தெரிவிக்கிறேன். திருச்செந்தூர், நாங்குநேரி, கோவில்பட்டி, சங்கரன் கோவில் முதலிய பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் கிராமங்களிலெல்லாம் இந்தத் திட்டம் அமுலுக்கு வரும்.

SRI K. PERIANNAN : பஞ்ச நிவாரண வேலைகள் எந்தெந்த தாலூக்காகக்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எப்படி எழும் ? மூலக் கேள்வி திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. ஆகை யால், அங்கத்தினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : அநேக கிராமங்கள் பாதிக் கப்பட்டிருக்கின்றன. சில கிராமங்களை கலெக்டர் "நோடிபை" செய் திருப்பதாகத் தெரிகிறது. பழையபடியும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் எவை என்பதை பரிசீலனை செய்வதற்கு கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படுமா ? கலெக்டர் மூலம் "பைனலைஸ்" செய்வதற்கு சர்க் கார் கலெக்டருக்கு அதிகாரம் கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்தெந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கலெக்டர் அவர்கள் கொடுத்த தகவல் பேரில் தான் அவர்கள் ரிபோர்ட் மேல் தான் இந்தத் திட்டத்தில் கிராமங் கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏதாவது கிராமங்கள் விடப் பட்டிருந்தால், அதை கலெக்டர் அவர்கள் கவனிக்கலாம்.

SRI R. KRISHNASAMI NAIDU : இத்தகைய பஞ்ச நிவாரண வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு சென்ற வருடம் பல மைல்களுக்கு 20,000, 30,000 ரூபாய் செலவில் மண் ரோடுகள் போடப்பட்டன. அந்த ரோடுகள் வெள்ளம் அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமையில் பிர யோசனமற்றதாக இருக்கிறது. ஆகவே பஞ்ச நிவாரண வேலைகளின் கீழ் ரோடு போடும்பொழுது சரளை பரப்பும் வேலையையும் முடிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

[30th March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜில்லாவை பொறுத்தமட்டில் அம்மாதிரி வேலை நடக்கும். மற்ற ஜில்லாக்களின் சமாசாரம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பருவ மழை தவறிய மற்ற ஜில்லாக்களிலும்........

MR. SPEAKER : இந்தக் கேள்வி திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. கனம் அங்கத்தினர் பெரியண்ணனுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும் பொருந்தும். ஆகையால் இந்தக் கேள்வியில் தாங்கள் எப்படி மற்ற ஜில்லாக்களைப் பற்றி கேட்கலாம்? அதுபற்றி தாங்கள் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

Supply of water to Tholudur Project

* *S.N. Q.* 24.—SRI M. SELVARAJ : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation through Thiru M. Selvaraj, M.L.A., from the public of Tholar, Peenadam and Aviyangudi villages of Vridachalam taluk, about the utilisation of the surplus waters of Mettur Reservoir to Tholudur Project and to Emanari; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of utilising the waters of Mettur Reservoir was carefully examined and it was found not feasible.

SRI M. SELVARAJ : விருத்தாசலம் தாலூகா தொழுதூர் ப்ராஜக்டுக்கும், எமனேரிக்கும் 26,000 ஏகருக்கு பாசன வசதி தேவையிருந்தும், 17,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி செய்ய முடியவில்லை. மேட்டூர் அணையிலிருந்து சேலம் ஜில்லா நாமக்கல், லட்சுபாளையம் வழியாக உபரி தண்ணீரை இங்கே திருப்பிவிட்டு சௌகரியம் செய்வதுப்பற்றி "ரி-இன்வெஸ்டிகேட்" செய்வதற்கு "சூபரின்டெண்டிங் என்ஜினியர்" தலைமையில் ஒரு தனி டிவிஷன் நியமிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இதுபற்றி சீப் என்ஜினியர் பரிசீலனை செய்து, முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஒரு ப்ராஜக்டிலிருந்து தண்ணீரை இன்னொரு ப்ராஜக்டுக்குக் கொண்டு வருவது என்றால் அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. ரொம்ப தூரம் வரவேண்டியிருக்கும். தவிறவும் மைசூர் கவர்ன்மெண்டுக்கும் இந்த கவர்ன்மெண்டுக்கும் உள்ள எக்ரிமெண்டுபடி நடக்க வேண்டியிருக்கும். ஆகவே, இம்மாதிரி அங்கிருந்து தண்ணீர் கொண்டு வருவது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI R. SRINIVASA IYER : தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தேவையானதற்குமேல் உபரி ஜலம் மேட்டூர் அணைக்குக் கீழே வழிந்தோடுகிறதா ? உபரி ஜலம் ஏதாவது இருக்கிறதா என்பதை சர்க்கார் கண்டு பிடித்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளம் ஜாஸ்தியாக வரும்போது தான் உபரி ஜலம் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

Wenlock Downs Advisory Committee

* 1058 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the functioning of the Wenlock Downs Advisory Committee in Ootacamund?